# தென்னாப்பிரிக்காவில் பிரிக்ஸ் மாநாடு

**புது தில்லி, ஆக. 22:** பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு தென்னாப்பிரிக்காவில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இந்த மாநாட்டின்போது பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் இடையிலான நேரடி சந்திப்பு நடைபெறுமா என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட 'பிரிக்ஸ்' கூட்டமைப்பின் மாநாடு ஜோஹன்னஸ்பர்கில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. வரும் 24-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. அதில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி தில்லியில் இருந்து செவ்வாய்க்கிழமை காலை தென்னாப்பிரிக்கா புறப்பட்டுச் சென்றார்.

**தொழில்துறை கருத்தரங்கு:** முதல் நிகழ்வாக பிரிக்ஸ் தொழில்துறை குழுமத் தலைவர்களுடனான கருத்தரங்கு நடைபெற்றது. அதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கு தென்னாப்பிரிக்க அதிபர் சிரில் ராமபோசா வழங்கிய இரவு விருந்திலும் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

பிரிக்ஸ் மாநாட்டு நிகழ்ச்சி புதன்கிழமையும், பிரிக்ஸ்-ஆப்பிரிக்கா கூட்டமைப்பு கூட்டம் வியாழக்கிழமையும் நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி பிற நாட்டு தலைவர்களுடன் பங்கேற்கிறார்.

**ஒத்துழைப்பு வலுப்படும்:** தென்னாப்பிரிக்கா பயணத்துக்கு முன்பாக பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது: பல்வேறு துறைகளில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு வலுவடைந்துள்ளது. தெற்குலகின் பிரச்னைகளை விவாதிக்கும் முக்கியத் தளமாக பிரிக்ஸ் மாறியுள்ளது. தெற்குலக நாடுகளின் வளர்ச்சி, பலதரப்பு அமைப்புகளின் சீர்திருத்தங்கள் உள்ளிட்டவை குறித்தும் பிரிக்ஸ் கூட்டம், மாநாடுகளில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளுக்கு இடையே எதிர்காலத்தில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வதற்கு ஜோகன்னஸ்பர்க் மாநாடு உதவும். பிரிக்ஸ் கூட்டமைப்பில் சீர்திருத்தங்களைப் புகுத்துவது தொடர்பாகவும் மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

மாநாட்டில் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்குமாறு பல நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதை ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளேன். பிரிக்ஸ் கூட்டமைப்பைச் சேர்ந்த சில நாடுகளின் தலைவர்களுடனும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்.

**கிரீஸ் பயணம்:** தென்னாப்பிரிக்க அரசுமுறைப் பயணத்தை முடித்துக்கொண்டு வரும் 25-ஆம் தேதி கிரீஸ் செல்லவுள்ளேன். அந்நாட்டுப் பிரதமர் கிரியகோஸ் மிட்சோடாகிஸ் விடுத்த அழைப்பை ஏற்று அந்நாட்டுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறேன். அந்நாட்டுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை. கடந்த 40 ஆண்டுகளில் கிரீஸுக்கு பயணம் மேற்கொள்ளும் முதல் இந்திய பிரதமர் என்ற சிறப்பைப் பெறுவதிலும் மகிழ்ச்சி.

இந்தியாவுக்கும் கிரீஸுக்கும் இடையேயான தொடர்பு பல நூற்றாண்டுகளைக் கடந்தது. ஜனநாயகம், சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி முறை, பன்முகத் தன்மை ஆகியவை பண்டைய காலம் முதல் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுக்கு அடிப்படையாக உள்ளன.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியாவுக்கும் கிரீஸுக்கும் இடையே நெருங்கிய ஒத்துழைப்பு காணப்படுகிறது. இந்தப் பயணமானது இருதரப்பு நல்லுறவில் புதிய அத்தியாயமாக அமையும். கிரீஸில் வசிக்கும் இந்திய சமூகத்தினரையும் சந்தித்துப் பேசவுள்ளேன் என அந்த அறிக்கையில் பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

**புதிய நாடுகள்:** பிரிக்ஸ் கூட்டமைப்பில் மேலும் சில நாடுகளை இணைத்துக் கொள்வது தொடர்பாக இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆர்ஜென்டீனா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான், கியூபா, எத்தியோப்பியா, துருக்கி உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட நாடுகள் பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணைய விருப்பம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு பிராந்தியங்களைச் சேர்ந்த சுமார் 20 நாடுகளின் தலைவர்கள் பிரிக்ஸ் மாநாட்டுக்கு சிறப்புப் பார்வையாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஷி ஜின்பிங்கும் நேரடியாக சந்தித்துப் பேசுவார்களா என்கிற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. சாமர்கண்டில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிலும், பாலி ஜி20 மாநாட்டிலும் இருவரும் நேருக்கு நேர் சந்தித்தனர் என்றாலும், அதில் பேச்சுவார்த்தை இடம்பெறவில்லை.

ஜோஹன்னஸ்பர்க் நகரில் நேரடியாக சந்தித்துப் பேசினால், 2020 கல்வான் தாக்குதலுக்குப் பிறகு இரு தலைவர்களும் சந்திக்கும் நிகழ்வாக அது இருக்கும்.

## பிரதமர் மோடி–ஷி ஜின்பிங் சந்திப்பு?




தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் பிரதமர் நரேந்திர மோடிக்கு செவ்வாய்க்கிழமை உற்சாக வரவேற்பு அளித்த இந்திய வம்சாவளியினர்.

## ஜோஹன்னஸ்பர்க்கில் உற்சாக வரவேற்பு

**ஜோஹன்னஸ்பர்க், ஆக. 22:** பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக தென்னாப்பிரிக்கா சென்றடைந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு ஜோஹன்னஸ்பர்க் நகரில் நடைபெறவுள்ளது. கரோனா தொற்று பரவலுக்குப் பிறகு நடைபெறும் முதல் நேரடி மாநாடு என்பதால் அதன் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் மோடி செவ்வாய்க்கிழமை ஜோஹன்னஸ்பர்க் நகரைச் சென்றடைந்தார். அங்குள்ள வாட்டர்லூஃப் விமானப் படைத் தளத்தில் பிரதமர் மோடியை தென்னாப்பிரிக்க துணை அதிபர் பால் மஷடைல் நேரில் வரவேற்றார். அந்நாட்டு அதிகாரிகளையும் அவர் பிரதமர் மோடிக்கு அறிமுகப்படுத்திவைத்தார்.

பின்னர், பிரதமர் மோடிக்கு தென்னாப்பிரிக்க ராணுவம் சார்பில் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. விமானப் படைத் தளத்தில் குழுமியிருந்த அந்நாட்டு பழங்குடியினர், இசை, நடனத்துடன் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அவற்றை பிரதமர் மோடி கண்டு ரசித்தார்.

விமானப் படைத் தளத்துக்கு வெளியே கூடியிருந்த இந்திய வம்சாவளியினரும் பிரதமர் மோடியை உற்சாகத்துடன் வரவேற்றனர். அவர்களது வரவேற்பை பிரதமர் மோடி ஏற்றுக் கொண்டார். அங்கிருந்தவர்களுடன் சிறிது நேரம் அவர் உரையாடினார்.

பிரதமர் மோடி தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜோஹன்னஸ்பர்கின் சேண்டன் சன் விடுதியில் கூடியிருந்த இந்திய சமூகத்தினர் மேள தாளங்களுடன் அவரை வரவேற்றனர். தென்னாப்பிரிக்காவில் தன்னை வரவேற்ற இந்திய சமூகத்தினருக்கு நன்றி தெரிவிப்பதாக எக்ஸ் சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி பதிவிட்டார்.

# நிலவில் இன்று தடம் பதிக்கிறது சந்திரயான்-3

**சென்னை, ஆக. 22:** இந்திய விண்வெளி ஆய்வின் வரலாற்று நிகழ்வாக சந்திரயான்-3 விண்கலம் நிலவில் புதன்கிழமை (ஆக. 23) மாலை 6.04 மணிக்கு தடம் பதிக்கவுள்ளது.

லேண்டரும், அதனுள் இருக்கும் ரோவர் சாதனமும் வெற்றிகரமாக தரையிறங்கும்பட்சத்தில், நிலவின் தென் துருவத்துக்கு அருகே தடம்பதித்த உலகின் முதல் தேசமாக இந்தியா உருவெடுக்கும்.

குறிப்பாக ரஷியாவின் 'லூனா-25' விண்கலம் அண்மையில் நிலவின் மேற்பரப்பில் மோதி தோல்வியடைந்த நிலையில், சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றியை உலக நாடுகள் உற்று நோக்கி வருகின்றன.

அமெரிக்கா, ரஷியா, சீனா உள்ளிட்ட நாடுகள் நிலவுக்கு விண்கலங்களை அனுப்பி பல்வேறு ஆய்வுகளை முன்னெடுத்திருந்தாலும், அங்கு தண்ணீரின் மூலக்கூறுகள் உள்ளன என்பதைக் கண்டறிந்தது இந்தியாவின் சந்திரயான்-1 விண்கலம்தான்.

அதன் தொடர்ச்சியாக வேறு எந்த நாடுமே கால் பதிக்காத நிலவின் தென்துருவத்தை தேர்வு செய்து அங்கு சந்திரயான்-2 விண்கலத்தை கடந்த 2019-இல் அனுப்பியது இஸ்ரோ. எதிர்பாராத விதமாக லேண்டர் கலன் வேகமாகத் தரையிறங்கியதால் அதன் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. சோதனைகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்ற இஸ்ரோ, பல்வேறு மாற்றங்களுடன் சந்திரயான்-3 விண்கலத்தை வடிவமைத்து, எல்விஎம்-3 ராக்கெட் மூலம் கடந்த ஜூலை 14-ஆம் தேதி விண்ணில் செலுத்தியது.

பல்வேறுகட்ட பயணங்களுக்கு பின்னர் விண்கலம் தற்போது நிலவின் சுற்றுப் பாதையில் பயணித்து வருகிறது. இதனிடையே சந்திரயான் 3-இல் உள்ள உந்து கலனில் இருந்து லேண்டர் கடந்த 17-ஆம் தேதி விடுவிக்கப்பட்டது.

லேண்டர் கலனைப் பொருத்தவரை நிலவின் தரைப்பரப்பில் இருந்து குறைந்தபட்சம் 25 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 134 கி.மீ தொலைவும் கொண்ட சுற்றுப் பாதையில் சுற்றி வருகிறது. மறுபுறம் உந்து கலன் குறைந்தபட்சம் 153 கி.மீ. தொலைவும், அதிகபட்சம் 163 கி.மீ தொலைவும் கொண்ட சுற்றுப் பாதையில் உள்ளது.

இந்தச் சூழலில் லேண்டர் கலன் புதன்கிழமை மாலை நிலவில் மெதுவாகத் தரையிறங்க உள்ளது. அதன்படி நிலவுக்கு அருகே 25 கிலோ மீட்டர் உயரத்துக்கு லேண்டர் வந்ததும் எதிர்விசை நடைமுறையைப் பயன்படுத்தி அதன் வேகம் குறைக்கப்படும். அதன்மூலம் நிலவின் தரைப் பகுதிக்கும், லேண்டருக்குமான உயரமும் படிப்படியாக குறையும்.

நிலவின் தரையில் இருந்து 150 மீட்டர் உயரத்துக்கு லேண்டர் கொண்டுவரப்பட்டதும் சில விநாடிகள் அந்த நிலையிலேயே நிறுத்தி வைக்கப்படும். அதைத் தொடர்ந்து அதிலுள்ள சென்சார்கள் மூலம் தரையிறங்க சரியான சமதள பரப்புடைய இடம் தேர்வு செய்யப்படும். அதன்பின் லேண்டரின் வேகம் பூஜ்ஜிய நிலையை எட்டியதும் மாலை 6.04 மணிக்கு நிலவின் தென்துருவப் பகுதிக்கு அருகே மிக மெதுவாக லேண்டர் தரையிறங்கும்.

அதற்கு அடுத்த 3 மணி நேரத்துக்கு பின்னர் அதில் உள்ள ரோவர் சாதனம் வெளியேறி ஆய்வு மேற்கொள்ளும். லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்த படியும், ரோவர் சாதனம் நிலவின் தரைப்பரப்பில் பயணித்தும் 14 நாள்கள் ஆய்வு மேற்கொள்ளும். இதற்காக லேண்டரில் 4 ஆய்வுக் கருவிகளும், ரோவரில் 2 ஆய்வுக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

## சரித்திர வெற்றிக்கு ஆயத்தம்



லேண்டரில் உள்ள கேமரா மூலம் நிலவின் தரைப் பரப்புக்கு 70 கி.மீ. உயரத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்கள்.

## உத்வேகம், உற்சாகம்

லேண்டர் கலனில் உள்ள கேமரா மூலம் நிலவின் தரைப் பரப்புக்கு 70 கிலோ மீட்டர் உயரத்திலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டது. அதைத் தொடர்ந்து இஸ்ரோ சார்பில் வெளியிடப்பட்ட ட்விட்டர் பதிவு:

திட்டமிட்டபடி சந்திரயான்-3 திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தரையிறங்குவதற்கான வழக்கமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலக்கை நோக்கிய லேண்டரின் பயணம் தொடர்கிறது.

இஸ்ரோவின் செயல் திட்ட கட்டுப்பாட்டு மையம் உத்வேகத்திலும், உற்சாகத்திலும் நிரம்பியுள்ளது என்று அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்பார்ப்பை உயர்த்தும் 'பிரிக்ஸ்'!

உலக நாடுகளின், குறிப்பாக ஜி7, ஐரோப்பியக் கூட்டமைப்பில் உள்ள நாடுகளின் கவனம் தென்னாப்பிரிக்கத் தலைநகர் ஜோகன்னஸ்பர்கில் நடைபெறும் 'பிரிக்ஸ்' மாநாட்டில் குவிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பிரேஸில், ரஷியா, இந்தியா, சீனா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய 'பிரிக்ஸ்' கூட்டமைப்பின் 15-ஆவது மாநாடு பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது. மேலை நாடுகள் மட்டுமல்ல, வளர்ச்சி அடையும் நாடுகளும் இந்த மாநாட்டைக் கூர்ந்து கவனிக்கின்றன.

அமெரிக்க - சோவியத் யூனியன் பனிப்போருக்குப் பிந்தைய காலகட்டத்தில், எல்லா சர்வதேச அமைப்புகளும் மேற்கு வல்லரசுகளின் கைப்பாவைகளாக மாறிவிட்டிருந்த நிலைமை. கீழை நாடுகளைத் தங்களுக்கு சமமான இடத்தில் உட்கார வைத்துப் பேச அவை தயாராக இருக்கவில்லை. அப்படிப்பட்ட சூழலில், மேற்கு வல்லரசுகளை முற்றிலுமாகத் தவிர்த்து உருவாக்கப்பட்ட மாற்றுக் கூட்டமைப்புதான் 'பிரிக்ஸ்'.

உலக மக்கள்தொகையில் 40%, உலக ஜிடிபியில் 23% வலிமையுடன் கூடிய கூட்டமைப்பாக 'பிரிக்ஸ்' உயர்ந்திருக்கிறது. 2009-இல் நடந்த முதலாவது மாநாட்டில் தென்னாப்பிரிக்கா இருக்கவில்லை. 2010-இல் தென்னாப்பிரிக்காவும் சேர்ந்து கொண்டபோது, 'பிரிக்' என்பது 'பிரிக்ஸ்' என்று மாறியது. வளர்ச்சி அடைந்த நாடுகளின் ஜி7 கூட்டமைப்புக்கு நிகரான மாற்றுக் கூட்டணியாக இந்த அமைப்பு உருவெடுத்திருக்கிறது.

மேலை நாடுகளின் அமைப்புகளைப்போல இன ஒற்றுமையோ, பொதுவான பாதுகாப்புக் கூட்டுறவோ இல்லாமல் இருப்பது 'பிரிக்ஸ்' அமைப்பின் பலவீனம். அதையே பலமாகவும் கருதலாம். சர்வதேச அரசியலுக்கு 'பிரிக்ஸ்' மூன்று பங்களிப்புகளைச் செய்திருக்கிறது. தங்களது அரசியல் அமைப்பு, கலாசாரம், கொள்கைகள், வெளியுறவுப் பார்வை, இன ஒற்றுமை ஆகியவற்றை முன்னிறுத்தாமல் உலகமய அமைப்பை உருவாக்க முடியும் என்பதை உணர்த்தி இருக்கிறது 'பிரிக்ஸ்'.

பொருளாதார தளத்தில், உலக வங்கிக்கு மாற்றாக 2014-இல் என்.டி.பி. என்கிற 'புதிய வளர்ச்சி வங்கி'யை உருவாக்கி இருக்கிறது. இதுவரை, முக்கியமான 100 கட்டமைப்புத் திட்டங்களுக்கு, என்.டி.பி. 34 பில்லியன் டாலர் கடனுதவி வழங்கி இருக்கிறது. 2030-க்குள் உலக வங்கியைப் பின்னுக்குத் தள்ளி 350 பில்லியன் டாலர் கடனுதவி வழங்கும் நிலைக்கு என்.டி.பி. உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இரண்டாவது பங்களிப்பு.

தற்போதைய உலக நிதிப் பரிமாற்றங்கள் அனைத்தும் அமெரிக்க டாலரில் மட்டுமே நடைபெறுகின்றன. அதற்கு மாற்றாக இன்னொரு செலாவணியிலோ, இப்போது இந்தியா முன்னெடுத்திருக்கும் அந்தந்த நாட்டின் செலாவணியிலோ வர்த்தகம் என்பது 'பிரிக்ஸ்' முன்மொழியும் மாற்று. இதற்கு முன்னர் 'யூரோ' மூலம் ஐரோப்பியக் கூட்டமைப்பு தோற்றுப்போன முயற்சிதான் என்றாலும் 'பிரிக்ஸ்' விரிவுபடுமானால், அந்த முயற்சி வெற்றிபெறக் கூடும்.

'பிரிக்ஸ்' அமைப்பில் இணைய 40 நாடுகள் வரிசைகட்டி நிற்கின்றன. அவற்றில் 19 நாடுகள் முறையாக விண்ணப்பித்திருக்கின்றன. ஆர்ஜென்டினா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஈரான் ஆகிய நான்கு நாடுகளைச் சேர்த்துக்கொள்வது என்பதில் கருத்தொற்றுமை ஏற்பட்டிருப்பதால், அவை இணைக்கப்படக் கூடும்.

ஜோகன்னஸ்பர்க் மாநாட்டுக்கு, 'பிரிக்ஸ்' தலைவர்கள் மட்டுமல்லாமல், ஆப்பிரிக்கக் கூட்டமைப்பின் 55 உறுப்பு நாட்டுத் தலைவர்களும், 20 வளர்ந்து வரும் சிறிய ஆசிய, தென்னாப்பிரிக்க, பசிபிக் தீவு நாடுகளின் தலைவர்களும் தென்னாப்பிரிக்காவால் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நாடுகள், வருங்காலத்தில் அணிசாரா நாடுகள் அமைப்புபோல, வலிமையான கூட்டணியாக ஒருங்கிணையக்கூடும்.

விண்ணப்பித்திருக்கும் நாடுகளை எல்லாம் 'பிரிக்ஸ்' கூட்டமைப்பில் இணைத்துக் கொள்வதில் ஆபத்து இருப்பதை இந்தியா உணர்ந்தே இருக்கிறது. உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமான சீனாவின் கைப்பாவைகளாக அந்த நாடுகள் மாறிவிடவும், அமெரிக்காவுக்கு எதிரான அமைப்பாக 'பிரிக்ஸ்' மாறிவிடவும் வாய்ப்பு இருப்பதால், புதிய உறுப்பினர்களை இணைப்பதில் இந்தியா கவனமாக இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

2019-க்குப் பிறகு தலைவர்கள் நேரடியாகக் கலந்துகொள்ளும் மாநாடு இதுதான். 2022-இல் ஏனைய பகுதிகளில் கொவைட் 19 பலவீனப்பட்டிருந்தாலும், சீனாவில் குறையாததால், காணொலி மாநாடாகத்தான் 'பிரிக்ஸ்' அமைப்பு கூடியது. இந்த முறை ரஷிய அதிபர் புதின் மட்டும் நேரில் வராமல் காணொலி மூலம் கலந்து கொள்கிறார். அவருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணை இருப்பதால் அவரால் கலந்துகொள்ள இயலவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை, 2020 கல்வான் தாக்குதலுக்குப் பிறகு, இந்திய பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஷி ஜின்பிங்கும் நேரடியாக சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஜோகன்னஸ்பர்கில் ஏற்படக்கூடும். சாமர்கண்டில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டிலும், பாலி ஜி20 மாநாட்டிலும் நேருக்கு நேர் சந்தித்தனர் என்றாலும், அந்த சந்திப்புகள், மரியாதை வணக்கத்துடன் முடிந்துவிட்டன.

இன்னும் இரண்டு வாரங்களில், இந்தியா ஜி20 மாநாட்டைத் தலைமையேற்று நடத்த இருக்கிறது. அதில் சீனா உள்ளிட்ட 'பிரிக்ஸ்' உறுப்பு நாடுகள் அனைத்தும் கலந்து கொள்வதில்தான் மாநாட்டின் வெற்றி அடங்கி இருக்கிறது. அந்த மாநாட்டின் தீர்மானங்களில் கருத்தொற்றுமை ஏற்படுவதும் அவசியம். அதற்கு, 'பிரிக்ஸ்' மாநாடு வழிகோலும் என்று எதிர்பார்க்கலாம்!



# நிலவை நெருங்குகிறோம் !

நெல்லை சு.முத்து

**உந்துவிசைக் கலனில் இருந்து பிரித்து விடப்பட்ட 'விக்ரம்' தரையிறங்கி, 153 கி.மீ. உயரத்தில் நிலவை நெருங்கி வட்டமடிக்கத் தொடங்கியது. தரையிறங்கியின் வேகத்தை மட்டுப்படுத்த 80 கிலோ தள்ளுவிசையுடன் கூடிய நான்கு உந்து பொறிகளும் 5.8 கிலோ விசை தரும் எட்டு நுண்விசைப் பொறிகளும் இயக்குவிக்கப்பட்டன.**

# விரைவில் 5 ட்ரில்லியன் பொருளாதார மதிப்பு கொண்ட நாடாக இந்தியா

## பிரதமர் மோடி




பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க தென்னாப்பிரிக்கா வந்துள்ள (இடமிருந்து) பிரேசில் அதிபர் டாசில்வா, சீன அதிபர் ஜின்பிங், தென்னாப்பிரிக்க அதிபர் ராமபோசா, ரஷிய வெளியுறவு அமைச்சர் லாவ்ரோவ் ஆகியோருடன் பிரதமர் நரேந்திர மோடி.

**ஜோஹன்னஸ்பர்க், ஆக. 22:** விரைவில் 5 ட்ரில்லியன் டாலர் (சுமார் ரூ.415 லட்சம் கோடி) பொருளாதார மதிப்பு கொண்ட நாடாக இந்தியா மாறும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க் நகரில் 'பிரிக்ஸ்' தொழிலதிபர்கள் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

சர்வதேச பொருளாதாரத்தில் குழப்பமான நிலை ஏற்பட்டுள்ள போதிலும், உலகில் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக தற்போது இந்தியா உள்ளது. பேரிடர்களையும் இன்னல்களையும் பொருளாதார மீட்சிக்கான வாய்ப்புகளாக இந்தியா மாற்றியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள், இந்தியாவில் எளிதாக வணிகம் மேற்கொள்வதில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்துள்ளது.

இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி), திவால் சட்டம் அமல்படுத்தப்பட்டது முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் பல்வேறு வணிகங்கள் கைகோக்க வேண்டும். பாதுகாப்பு, விண்வெளி போன்ற துறைகளில் தனியார் முதலீடுகளுக்கான கதவுகளை இந்தியா திறந்துள்ளது.

சூரிய மின்சக்தி, காற்றாலை, மின்சார வாகனங்கள், பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்டவற்றில் இந்தியாவை சர்வதேச உற்பத்தி மையமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் 5 ட்ரில்லியன் டாலர் பொருளாதார மதிப்பு கொண்ட நாடாக இந்தியா மாறும். வருங்காலத்தில் உலகின் வளர்ச்சி என்ஜினாக இந்தியா இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார் அவர்.

EVA STALIN IAS ACADEMY

# உரிமைத் தொகையால் பெண்கள் வாழ்வாதாரம் மேம்படும்

## முதல்வர் ஸ்டாலின் உறுதி

**சென்னை, ஆக.22:** மகளிர் உரிமைத் தொகை திட்டத்தால் பெண்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.

முதல்வருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. காணொலி வாயிலாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் ஆற்றிய உரை:

பொருளாதார ஆலோசனைக் குழுவின் கடந்த கூட்டங்களில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அதன்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்றுமதிக் கொள்கை உள்பட பல்வேறு துறைகளுக்கான தனித்தனிக் கொள்கைகள் வகுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, பெண்களுக்கு அதிக வேலைகளைத் தரக்கூடிய தோல் அல்லாத காலணி உற்பத்தியிலும், எதிர்கால வளர்ச்சித் துறையான மின்வாகன உற்பத்தியிலும் நாட்டிலேயே அதிக முதலீடுகளைப் பெற்றுள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தித் துறையின் மூலம் ரூ.2.97 லட்சம் கோடிக்கு முதலீடுகளை ஈர்த்துள்ளோம்.



சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டம்.

**முக்கியத் திட்டங்கள்:** மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, நான் முதல்வன் போன்ற திட்டங்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இல்லம் தேடிக் கல்வியால், இதுவரை 27 லட்சம் மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தால் 13 லட்சம் மாணவர்களும் பயன் பெற்றுள்ளனர். உயர்கல்வியை ஊக்குவிக்க வழிசெய்யும், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் இதுவரை 1.50 லட்சம் மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றலைத் தவிர்க்க, காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. இந்தத் திட்டமானது ரூ.404 கோடி செலவில் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. இதனால், 18.53 லட்சம் மாணவ-மாணவிகள் பயன்பெறுவர். ஆட்சியின் முக்கியத் திட்டங்களில் ஒன்றான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தால் பெண்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும். இத்துடன் சமூகத்தில் பெண்கள் சுயமரியாதையோடு வாழ்வதற்கும் வழிவகுக்கும்.

இத்திட்டத்துக்காக 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. வருவாய், சொத்துகள், மின் பயன்பாடு போன்ற தகுதிக் குறியீடுகள் பற்றி தரவுகளை பலமாதங்களாகத் தொகுத்துள்ளோம். இவற்றின் மூலம் தகுதியுள்ள குடும்பத் தலைவிகளைத் தேர்ந்தெடுத்து பயன்பெறச் செய்ய வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, நிதித் துறை முதன்மைச் செயலர் த.உதயச்சந்திரன், பேராசிரியர்களும், பொருளாதார நிபுணர்களுமான ரகுராம் ராஜன், எஸ்தர் டஃப்லோ, ஜீன் ட்ரேஸ், அரவிந்த் சுப்ரமணியன், எஸ்.நாராயணன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# சந்திரயான்-3

## சாதனைப் பயணம் இதுவரை...!



நிலவின் தென் துருவத்துக்கு அருகே தரையிறங்கப் போகும் சந்திரயான்-3 விண்கலம், கடந்த 41 நாள்களாக புவி வட்டப் பாதையிலும், நிலவின் சுற்று வட்டப் பாதையிலும் பயணித்ததுடன் அனைத்து இலக்குகளையும் வெற்றிகரமாக கடந்து புதிய வரலாறு படைக்க காத்திருக்கிறது.

ஒவ்வொரு படிநிலையை சந்திரயான் கடக்கும்போதும் தேசத்தின் மனநிலையில் பரவசமும் பரபரப்பும் ஒருசேர கலந்திருந்தன. சரித்திர சாதனைக்கு ஆயத்தமாகி உள்ள சந்திரயான்-3 விண்கலம், கடந்த 41 நாள்களாக மேற்கொண்ட பயணத்தின் மீள்பார்வை.










| | |
|---|---|
| ஜூலை 13 | சந்திரயான் – 3 திட்டத்துக்கான 25.30 மணி நேர கவுன்ட் டவுன் தொடக்கம். |
| ஜூலை 14 | எல்விஎம் –3 ராக்கெட் மூலம் சந்திரயான்–3 விண்கலம் பிற்பகல் 2.35 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது. |
| ஜூலை 15 | குறைந்தபட்சம் 173 கி.மீ. மற்றும் அதிகபட்சம் 41,762 கி.மீ. தொலைவு கொண்ட புவி வட்டப் பாதைக்கு விண்கலம் கொண்டு செல்லப்பட்டது. |
| ஜூலை 17 | விண்கலம் பயணிக்கும் புவி வட்டப் பாதையின் தொலைவு 41,603 கி.மீ. * 226 கி.மீட்டராக அதிகரிக்கப்பட்டது. |
| ஜூலை 25 | சந்திரயான்–3 சுற்றுப் பாதை தொலைவு ஐந்தாவது முறையாக அதிகரிப்பு. குறைந்தபட்சம் 236 கி.மீ மற்றும் அதிகபட்சம் 1,27,603 கி.மீ தொலைவுக்கு விண்கலம் அனுப்பப்பட்டது. |
| ஆக. 1 | புவி ஈர்ப்பு விசையிலிருந்து விலக்கப்பட்டு நிலவை நோக்கிய புதிய பயணத்தைத் தொடங்கியது சந்திரயான் 3. |
| ஆக. 5 | மைல்கல் நிகழ்வாக நிலவின் ஈர்ப்பு விசைக்குள் நுழைந்த விண்கலம், குறைந்தபட்சம் 164 கி.மீ. மற்றும் அதிகபட்சம் 18,074 கி.மீ. தொலைவு கொண்ட சுற்றுவட்டப் பாதைக்குள் செலுத்தப்பட்டது. |
| ஆக. 6 | விண்கலம் பயணிக்கும் சுற்றுப் பாதை தொலைவு 170 கி.மீ * 4,313 கி.மீ–ஆக குறைப்பு. |
| ஆக. 9 | சுற்றுப் பாதை தொலைவு 174 கி.மீ. * 1,437 கி.மீ.–ஆக குறைப்பு. |
| ஆக. 14 | சந்திரயான்–3 விண்கலம் சுற்றி வரும் நிலவு வட்ட பாதைத் தொலைவு குறைந்தபட்சம் 150 கி.மீ.–ஆகவும், அதிகபட்சம் 177 கி.மீ–ஆகவும் மேலும் குறைக்கப்பட்டது. |
| ஆக. 17 | சந்திரயான்–3 திட்டத்தின் முக்கிய நிகழ்வாக உந்துகலனில் இருந்து லேண்டர் வெற்றிகரமாக விடுவிக்கப்பட்டது. |
| ஆக. 20 | நிலவின் மிக நெருக்கமான சுற்றுப் பாதையான 25 கி.மீ.* 134 கி.மீ. தொலைவில் விண்கலம் செலுத்தப்பட்டது. |
| ஆக. 21 | சந்திரயான்–2 மூலம் அனுப்பப்பட்ட ஆர்பிட்டர் மற்றும் சந்திரயான்–3 'விக்ரம்' லேண்டர் இடையே தகவல் தொடர்பு வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டது. |

தொகுப்பு: ஆ.கோபிகிருஷ்ணா, வடிவமைப்பு: அருண்